# கிறிஸ்தவ திருமணம்

## மறுரூபமாக்கும் சத்தியங்கள்

## கட்டுரை – 1

# கிறிஸ்தவ திருமணம்

**“விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக.” - எபிரெயர் 13:4**

திருமணம் என்பது வேதாகமத்தில் மிகவும் உயர்வாய்ப் பேசப்பட்டுள்ளது. இது மனித உறவுகளிலேயே மிகவும் புனிதமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இது குடும்பத்திற்கான அடித்தளமாகவும், ஒருவரையொருவர் மனுஷர் கையாளும் விஷயத்தில் முக்கிய அம்சமாகவும் உள்ளது. அன்பின் அடிப்படையில் திருமணமானது, பிள்ளைகளைப் பேணுவதற்காகத் தேவன் திட்டமிட்டிருந்த சூழ்நிலையினை உருவாக்கிக் கொடுக்கின்றது.

அன்பின் வெளிப்பாடான திருமணமானது மனுஷ உறவுகளிலேயே மிகவும் அருமையானதொரு உறவாகத் திகழ்ந்திட வேண்டும். பெரும்பாலும் இப்படியாகவே உள்ளது. எனினும் அநேகம் கிறிஸ்தவர்களின் திருமணங்களானது தங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களின் திருமணங்களைப் போலவே அன்றாட ஜீவியத்தின் கொந்தளிப்புகளில் பெரும்பாலும் சிக்கிக் காணப்படுவதை எளிதில் கண்டுகொள்ளலாம்.

பொருத்தமின்மைகள், மனஸ்தாபங்கள், மனம்விட்டுப் பேசாதிருத்தல், ஒருவர் இன்னொருவரின் தேவைகள் விஷயத்தில் புரிந்துகொள்ளாமை மற்றும் அன்றாட ஜீவியத்தின் தொடர் அழுத்தங்கள் ஆகிய இவை அனைத்தும் குடும்ப வாழ்க்கையினுடைய மென்மையான நீரோட்டத்திற்கு எதிராகக் காணப்படுகின்றது. இவைகள் திருமண வாழ்க்கையினுடைய ஆனந்தங்களைத் திருடிப்போடும் அழுத்தங்களில் சிலவாகும் மற்றும் இவை பெரும்பாலும் பிரிந்துபோவதற்கு அல்லது விவாகரத்து ஆகுவதற்கு வழிநடத்தி விடுகின்றதாய் இருக்கின்றது. திருமணத்தில் தேவன் நோக்கம் கொண்டுள்ளதான வேதவாக்கிய கொள்கைகளை ஆராய்வதே, நம்முடைய இந்தக் கட்டுரையின் நோக்கமாயிருக்கின்றது.

# மூன்று திருமணக் கொள்கைகள்

*"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்." – ஆதியாகமம் 2:24*

ஏதேன் தோட்டத்தில் தேவன் முதலாம் மனித ஜோடியைச் சிருஷ்டித்தபோது அவர்களுக்கு இரண்டு கட்டளைகளைக் கொடுப்பது ஏற்றதாயிருக்குமென்று கண்டார். அதில் ஒன்று அவருடனான அவர்களது உறவினை நிர்வகித்ததாயிருந்தது; அதாவது கீழ்ப்படிந்து ஜீவியுங்கள் - கீழ்ப்படியவில்லையென்றால் மரித்துப் போவீர்கள் என்பதாகும். மற்றொன்று அவர்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டிருக்கும் உறவினை நிர்வகிக்கின்றதாயிருக்கும்; அதாவது திருமணமாகும்.

இந்த வசனத்தினுடைய எளிமையான வார்த்தைகளில் மூன்று மாபெரும் கொள்கைகள் காணப்படுகின்றன. இந்த மூன்று கொள்கைகளும் மீறப்படுகிற காரியமானது மனவியல் நிபுணர்களினாலும், திருமணம் சார்ந்த ஆலோசகர்களினாலும் சந்தோஷமற்ற திருமணங்களுக்கான மூன்று முக்கிய பிரச்சனைகள் என்று இக்காலங்களில் அதிகதிகமாய் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு வருகின்றது.

- ## விட்டுவிட்டு

பெற்றோரின் கீழ்ப்பதினெட்டு முதல் இருபது வருஷங்கள் அல்லது இதற்கும் மேலான வருஷங்கள் வாழ்ந்து காணப்பட்ட பிற்பாடு, திருமணமானது முற்றிலும் புதியதொரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. தம்பதிகளில் ஒவ்வொருவரும் வித்தியாசமான விதங்களில் வளர்ந்து வந்தவர்களாவார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் வெவ்வேறு எதிர்ப்பார்ப்புகளுடன் இந்தப் புதிய உறவுக்குள்ளாகக் கடந்துவருகின்றனர்.

"எங்கள் வீட்டில் இக்காரியத்தினை நாங்கள் இப்படியாகச் செய்வதில்லை." "எனது தாயார் இப்படித்தான் உருளைக் கிழங்குகளைச் சமைப்பார்கள்." "பாத்திரங்களைக் கழுவும்

வேலைகளில் என்னுடைய தகப்பனார் எப்போதும் உதவுபவராக என் இல்லத்தில் காணப்படுவார்." "புதன்கிழமை இரவு வேளைகளில் எப்போதுமே நான் என் நண்பர்களுடன் வெளியே செல்வது வழக்கம்"... இப்படியே பட்டியல் தொடரும். ஒப்பிட்டுப்பார்ப்பது என்பது எப்போதும் வெறுப்பையே உருவாக்கிவிடும் மற்றும் இது திருமண வாழ்க்கையில் சிறுசிறு காரியங்களில் விட்டுக்கொடுத்துச் செல்வதைச் சிரமத்திற்குள்ளாக்கவும் செய்கின்றது.

திருமணம் என்னும் புது உலகமானது ஒரு சவாலாக எடுக்கப்பட்டு, அணுகப்பட வேண்டும். அது இருவரும் சேர்ந்து உருவாக்க வேண்டிய ஒரு புதிய ஜீவியமாகும். அது கடந்த காலத்தினுடைய அடிப்படையில் இல்லாமல், எழுதப்படாத வெறுமையான பக்கங்களையுடைய எதிர்க்காலத்தினுடைய அடிப்படையில் ஆகும். எதிர்க்காலத்தினுடைய அந்த வெறுமையான பக்கங்களில் எப்படி எழுதப்படும் என்பது இருவரை, அதாவது கணவன் மற்றும் மனைவியாகிய இருவரையே சார்ந்துள்ளது.

பெற்றோரைவிட்டு ஒருவன் பிரிந்து போவதற்கான வேதவாக்கிய கட்டளையானது, கடந்த கால வாழ்க்கையை விட்டுவிடும் முழுமையான பிரிதலை அர்த்தப்படுத்துகிறதில்லை. கடந்த காலமும், கடந்த காலத்தின் உறவுகளும் தற்காலத்தையோ அல்லது எதிர்க்காலத்தையோ ஆளக்கூடாது என்பதே அதன் அர்த்தமாகும். மணந்துள்ள துணையுடனான புதிய உறவானது, மற்ற அனைத்து உறவுகளைவிட மேலோங்கிக் காணப்படவேண்டும். திருமணம் வெற்றிகரமானதாய் அமையவேண்டுமெனில் இந்தப் புதிய உறவே முதலாவதாகக் காணப்பட வேண்டும்.

## ● இசைந்திருத்தல் / ஒன்றித்திருத்தல்

பெற்றோர்களின் இல்லங்களை விட்டுச்செல்லுதல் மாத்திரம் திருமணத்தைச் சந்தோஷகரமாக்குகிறதில்லை. மணம்புரியும் துணையுடன் சேர்ந்திடுவதற்காக வேண்டி, அநேகர் தங்களுடைய பெற்றோர்களின் இல்லங்களை விட்டுவிட்டுச் செல்வதில்லை,

மாறாக பெற்றோரின் இல்லத்தினுடைய சந்தோஷகரமற்ற நிலைமைகளிலிருந்து தப்பி ஓடிவிடுவதற்கே அப்படிச் செய்கின்றார்கள்.

"நீ எங்கே இடம் மாறிச்சென்றாலும், உன் பிரச்சனைகள் உன்னைத் தொடரவே செய்யும்" என்னும் பழமொழி உண்மையே. கடந்தகால பிரச்சனைகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கெனத் திருமணத்தை அடைக்கலமாக நாடுபவர்கள், திருமண வாழ்க்கையிலும் அதே பிரச்சனைகள் தங்களைப் பின்தொடர்வதைச் சீக்கிரத்தில் கண்டுகொள்வார்கள்.

திருமண உறவானது அன்பின் விளைவாக இருக்கின்ற படியினால் அதில் பொறுப்புகள் காணப்படுகின்றன - அர்ப்பணிப்பு உள்ளடங்குகின்றது. அவைகள் ஆழமான மற்றும் தனிப்பட்ட பொறுப்புகளாகும்/அர்ப்பணிப்பாகும். அது ஜீவிக்கும் மட்டும் நீடிக்கிறதாய் இருக்கும் - "மரணம் நம்மைப் பிரிக்கும் வரையில்" என்பதாகக் காணப்பட வேண்டும்.

தம்பதியினர் அர்ப்பணிப்பினால் ஒருவரோடு ஒருவர் ஒன்றித்திருத்தல் மாத்திரமல்ல, இன்னுமாகப் பாசத்தினாலும் ஒன்றித்திருத்தல் என்பது சமமான முக்கியத்துவம் உடையதாய் இருக்கின்றது. வார்த்தைகளைவிடச் செய்கைகள் ஆற்றல் மிக்கவையாய் இருப்பதினால், "நான் உன்னை அன்புகூருகிறேன்/ I love you" என்று மென்மையான குரலில் கூறிக் கட்டித்தழுவுவது அல்லது தோள்மேல் கைப்போட்டு அணைத்துக்கொள்வது என்பது திருமண உறவினை உறுதிப்படுத்துவதில் உதவிகரமானதாகும்.

மணம்புரிந்துள்ள துணைக்கான தனது அன்பினைப் பல்வேறு சின்னஞ்சிறு வழிகளில் வெளிப்படுத்துவதற்கு விழிப்பாய் இருப்பது என்பது திருமண ஒன்றிணைதலுக்குக் காரணமான காதலைத் தக்கவைப்பதற்கான முயற்சியே ஆகும்.

## ● ஒரே மாம்சம்

"அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்." திருமணம் விஷயத்திலுள்ள மூன்று வேதாகம கொள்கைகளில்,

இக்கொள்கையானது மிகவும் சிரமமான ஒன்றாகும். இது நீங்கள் மணம்புரிந்துள்ள உங்கள் துணையுடன் ஒரு புதிதான ஒன்று சேர்தலைக் கட்டியெழுப்புவதற்கென, உங்கள் சொந்த அடையாளங்களை நீங்கள் இழக்க வேண்டியதை உள்ளடக்கும்.

இயல்பாகவே நாம் ஒவ்வொருவரும் நம்முடைய தனித்துவங்களை விலையேறப்பெற்ற பொக்கிஷங்களாய் வைத்திருப்போம். எனினும் திருமணப்பந்தத்தில் இரண்டு வெவ்வேறு நபர்கள் கலந்து ஒன்றாகிட வேண்டும். இப்படிச் செய்ய வேண்டுமெனில், ஒரு புதிய நபராக முற்றிலுமாகக் கலந்து உருவாகிடுவதற்கெனத் தம்பதியினரில் ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்தத் தனித்துவத்தைக் கொஞ்சம் விட்டுக்கொடுத்திட வேண்டும்.

கணவன் என்பவர் வேதவாக்கியங்களின்படி இல்லத்தில் தலைமைத்துவத்தினைப் பெற்றிருப்பினும், திருமணத்தில் ஒன்றாகிடுவது என்பது அவரது வழிகளுக்கு அப்படியே ஒத்துப்போவதைக் குறிப்பதாகாது. மாறாக தம்பதிகள் இருவரின் தொடர்ச்சியான உரையாடல் வாயிலாக ஒருமித்து முடிவெடுப்பதினால் கட்டியெழுப்பப்படுதலாகும்.

எந்தவொரு காரியம் குறித்தும் ஒப்புக்கொண்டு முடிவு எடுக்கப்பட்டுவிட்டால், தங்கள் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தொடர்வது என்பது கணவன் மற்றும் மனைவியின் - இருவரின் பங்காகிவிடுகின்றது, அதுவும் தங்களது துணையைச் சந்தோஷமாய் வைத்துக்கொள்வதற்கான சமரச முயற்சியாகப் பார்க்கப்படாமல் திட்டங்களை நடைமுறைப்படுத்திட வேண்டும். “என்னுடைய திட்டங்களையும்” மற்றும் “உன்னுடைய திட்டங்களையும்” “நம்முடைய திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக” விட்டுக்கொடுப்பதின் மூலம் கணவனும், மனைவியும் உண்மையில் “ஒரே மாம்சம்” ஆகிடுவார்கள்.

# ஆவிக்குரிய மூன்று கொள்கைகள்

*"அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்றார்." – மத்தேயு 16:24*

கிறிஸ்தவ திருமணத்தில் புருஷன் மற்றும் ஸ்திரீக்கு இடையிலான உறவை நிர்வகிக்கும் மூன்று கொள்கைகளை ஆதியாகமம் 2:24-ஆம் வசனம் தெரிவித்திடுவது போல, மேல் இடம்பெறும் வசனமானது கிறிஸ்தவனுக்கும், அவரது பரலோக மணவாளனுக்கும் இடையிலுள்ள உறவினை நிர்வகிக்கும் மூன்று கொள்கைகளைத் தெரிவிக்கின்றதாயிருக்கின்றது.

இவ்விரண்டு வசனங்களும் முன்வைத்திடும் கொள்கைக்கு இடையிலுள்ள ஒற்றுமையினைக் கவனிப்பதற்குச் சுவாரஸ்யமாய் உள்ளது. ஒன்று மற்றொன்றினுடைய ஆவிக்குரிய நகலாய் உண்மையில் இருக்கின்றது.

## ● சுயத்தை வெறுத்தல்

சுயத்திற்கு மறுப்புத் தெரிவிப்பது என்பது சுய சித்தத்தைத் துறந்து, கிறிஸ்துவினுடைய கருத்துக்களை நாடுவதின் மூலம் நம்முடைய கருத்துக்களைக் கைவிட்டு விடுவதாகும். நம்முடைய ஜீவியத்தை இன்னொருவர் வனைந்திடுவதற்கு ஒப்புக்கொடுக்க விரும்புவது என்பது பலியாகும்.

இயேசு தம்முடைய ஜீவனைத் தேவனுக்கு அர்ப்பணித்த போது அவர் கொண்டிருந்த மனநிலையானது சங்கீதக்காரனால் பின்வருமாறு முன்னுரைக்கப்பட்டுள்ளது:

*"என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது." – சங்கீதம் 40:8*

இந்த வாஞ்சையினை அவர் எவ்வளவுக்கு முழுமையாய் நடைமுறைப்படுத்தினார் என்ற சாட்சியானது யோவான் 5:19-ஆம் வசனத்தில் இடம்பெறும் இயேசுவின் வார்த்தைகளில் விளங்குகின்றது:

“*மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.*”

இப்படிச் சொந்தச் சித்தத்தை முழுமையாய் ஒப்புக்கொடுத்து விடும் இதே காரியமே, கிறிஸ்தவனிடம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஆகையால் அவன் “தன் சொந்த வீட்டைவிட்டு,” தனக்குப் பின்னாக இருக்கும் ஜீவியத்தை விட்டுவிட்டுக் கிறிஸ்துவுடனான புதிய ஜீவியத்தின் சுவாரஸ்யமான வாழ்க்கைக்குள் பிரவேசிக்கின்றான்.

- ## தன் சிலுவையை எடுத்து

நாசரேத்தூரின் இயேசுவினுடைய வாழ்க்கைக்கு ஓர் அடையாளம் காணப்பட வேண்டுமெனில், அது சிலுவையாகத்தான் இருக்கும். சிலுவை ஓர் இடத்தில் இருப்பதைப் பார்த்தாலே, அதை ஒரு கிறிஸ்தவ ஆலயம் என்று நம்மால் உடனே கண்டுபிடித்திட முடியும். “அந்தப் பழைய கரடுமுரடான சிலுவையானது” விலையேறப் பெற்ற அடையாளச் சின்னமாகிவிட்டது, காரணம் அதில் அனுபவிக்கப்பட்ட கொடுமைகளாய் இராமல், மாறாக மற்றவர்களுக்காய்க் கொடுமையானதொரு மரணம் மரிப்பதற்கு ஒப்புக்கொடுக்க விரும்பும் அளவிற்கு அவர் தம்மைப் பலிசெலுத்தின காரியமே காரணமாகும்.

“*நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.*” *– ரோமர் 5:7, 8*

ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டுமானால், அவனும் இதுபோலத் தன் சொந்தச் சிலுவையினைச் சுமந்திட வேண்டும் - அதாவது அவனது சோதனைகளை, பிரச்சனைகளை மற்றும் ஏமாற்றங்களை/disappointments, “அவர் நியமித்த காரியங்களாக/His appointment” கண்டுகொண்டு - இப்படியாக அவனது நிச்சயிக்கப்பட்ட மணவாளனுடன் மிக நெருக்கமாக ஒன்றிணைந்திட வேண்டும்.

இப்படியாக இதே வாழ்க்கைமுறையில் ஈடுபட்டிருப்பதின் மூலமும், பாவம் அகற்றும் அதே வேலையில் பங்கெடுப்பதற்கான பயிற்சியை மேற்கொள்ளுவதின் மூலமும், இவன் தன் ஆண்டவரோடுகூட ஒன்றிசைந்திருக்கின்றான். இதை இயேசு துல்லியமாய் மத்தேயு 10:38-ஆம் வசனத்தில் தெரிவித்துள்ளார்:

"*தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.*"

## ● என்னைப் பின்பற்றி வா

எப்படித் திருமணம் பண்ணிடும் தம்பதிகள் தங்கள் சொந்தத் திட்டங்களைப் புதிதாய் இணைந்தவர்களுக்காக விட்டுவிட்டு "ஒரே மாம்சம்" ஆகுகின்றார்களோ, அதுபோலவே புதியவைகளுக்காகத் தன் சொந்தத் திட்டங்களை விட்டுவிடுவதன் மூலம், கிறிஸ்தவனும் தனது ஆண்டவருடன் ஒன்றாய் இருக்கின்றான்.

கிறிஸ்தவன் தனது முந்தைய பாதைகளை விட்டுவிடுவது மாத்திரமல்ல, அவன் எந்தப் பாதையில் கடந்துபோக வேண்டுமென்று அவனது புதிய மணவாளன் விரும்புவாரோ, அந்தப் பாதைகளையே அவன் நாடித் தேடிட வேண்டும். அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனுஷன் குறித்த உவமையை இயேசு கூறியிருக்கின்றார். அந்த மனுஷன் அசுத்த ஆவிகளை வெளியேற்றிவிட்டான், ஆனாலும் காலியான இடத்தை அவன் நிரப்பிடவில்லை. வெளியே போன அசுத்த ஆவி, கூட ஏழு அசுத்த ஆவிகளைக் கூட்டிக்கொண்டு திரும்பிவந்தது. இந்தத் தம்முடைய கதைக்கான சுருக்கத்தினை மத்தேயு 12:45-ஆம் வசனத்தில் தெரிவிக்கின்றார்.

"*அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிககேடுள்ளதாயிருக்கும்.*"

கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்குக் கிறிஸ்தவனானவன் கிறிஸ்துவைக்குறித்துக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் யார் என்றும், அவர் எப்படிச் செயல்படுகின்றார் என்றும் அவன் கற்றுக்கொள்ள வேண்டும். இது மனதினுடைய முழுமையான

புதிதாக்குதலுக்கு நேராய் வழிநடத்துகின்றது. இந்தப் புதிய மனதிற்கு இசைவாய் அவன் செயல்படுகையில், அவன் தனது பரலோக மணவாளனுடன் ஒன்றாகுகின்றான் - "மாம்சத்தில் ஒன்றாகிடாமல்," மாறாக "ஆவியில் ஒன்றாகுகின்றான்." இதை அப்போஸ்தலனாகிய பவுல் உரோமர் 12:2-ஆம் வசனத்தில் நன்கு தெரிவித்துள்ளார்:

"***நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.***"

## தேவனுடைய திருமண வாக்குறுதிகள்

"***நீத்திய விவாகத்திற்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன். உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய்.***" ***– ஓசியா 2:19, 20***

புதிய ஏற்பாட்டில் இயேசுவும், அவரது சபையும் மணவாளன் மற்றும் மணவாட்டியாக விவரிக்கப்பட்டிருப்பதுபோல, பழைய ஏற்பாட்டிலும் தேவன் மற்றும் இஸ்ரயேலுக்கு இடையிலுள்ள உறவுமுறைக்குத் திருமணம் என்பது அடையாளமான காட்சியாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தீர்க்கத்தரிசியாகிய ஓசியாவின் சம்பவத்திலுள்ள இந்த அடையாள காட்சிக்கு ஓர் உருவகக் கோணமும் உள்ளது. தேவனுடைய கட்டளைப்படி, ஓசியா ஒரு வேசியைத் திருமணம் பண்ணினார். அவர்களது முதலாம் குமாரனாகிய யெஸ்ரயேல் பிறந்த பிற்பாடு அவள் பின்பும் மற்ற ஆண்களுடன் தன் உறவினைத் தொடர்ந்தவளாக இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுக்கின்றாள். இவளை மறுபடியுமாகத் திருமண ஒன்றிணைதலுக்குள் கொண்டுவரும் படியாக ஓசியாவிற்குக் கட்டளையிடப்படுகின்றது.

முற்காலத்து இஸ்ரயேலர்கள் எண்ணற்ற விக்கிரகங்களைப் பின்பற்றிப்போய்த் தங்கள் உண்மையற்ற நிலைமையினை வெளிப்படுத்தியிருந்தபோதிலும், இவர்களுக்காகத் தேவன் கொண்டிருந்த அன்பையும், பராமரிப்பையும் - தீர்க்கத்தரிசி ஆண்டவருடைய கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தத்ரூபமாக வெளிப்படுத்துகின்றார்.

இஸ்ரயேலர்களுடைய வழிவிலகுதலைப் பொருட்படுத்தாமல் இஸ்ரயேலுக்காகத் தேவன் பண்ணின உண்மைக்கான நித்திய உடன்படிக்கையை அவர் வெளிப்படுத்திய வசனப்பகுதிகளிலேயே, மேற்கூறிய வசனம் காணப்படுகின்றது. நடைமுறைக் கோணத்தில் நாம் பார்க்கையில் இது தனிப்பட்ட திருமணங்களுக்கான கொள்கையையும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

- ***நித்திய***

"***மரணம் நம்மைப் பிரிக்கும் வரையில்***" என்பதே திருமண வாக்குறுதியின் அம்சமாய்க் காணப்படுகின்றது. இந்த வாழ்நாள் அர்ப்பணிப்பே திருமணத்தைப் புனிதமானதாக்கியுள்ளது.

விவாகரத்து மற்றும் திருமண பந்தமின்றி சேர்ந்து வாழுதல்/'live-in' relationship ஆகிய பிரபல்லியங்களானது விவாக ஒப்பந்தத்தின் நிரந்தரமான நிலைமையினை மிகவும் ஆழமாய் அரித்து அழித்துவிட்டது. "கணவன்" மற்றும் "மனைவி" எனும் உறவுகளானது பரிசோதனைப்பண்ணிப் பார்க்கப்படும் நிலையாகி விட்டது. இப்படியாக உறவுகளை முறித்துக்கொள்ளும் வசதிகள் உண்டாக்கிக் கொடுக்கப்பட்டு, திருமணம் என்பது கண்டிப்பாக வாழ்நாளெல்லாம் நீடிக்க வேண்டிய ஒரு காரியமல்ல என்ற கருத்து ஊக்குவிக்கப்படுகின்றது.

ஆனால் ஆதிகாலங்களிலிருந்து காரியங்கள் இப்படியாக இருக்கவில்லை. இந்த விஷயம் குறித்துள்ள இயேசு மற்றும்

பரிசேயர்களுக்கு இடையிலான சம்பாஷணையை மத்தேயு 19:3-9-ஆம் வசனங்களில் கவனிக்கவும்:

*"அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள். அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."*

"ஐசுவரியத்திலோ அல்லது தரித்திரத்திலோ, துன்பத்திலோ அல்லது இன்பத்திலோ" எனும் வார்த்தைகள் (விவாக வாக்குறுதியில்) இடம்பெறும் காரியமானது தங்கள் துணை, வாழ்நாள் முழுவதும் ஒன்றித்திருப்பதற்கு வாக்களித்துள்ளதாகத் தம்பதிகள் இருவருக்கும் நிச்சயத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

## ● நீதியும்

நீதியுடன் திருமண ஒன்றிணைதலுக்குள் பிரவேசித்துள்ள காரியமானது, அந்த ஒன்றிணைதலுக்கான ஆரோக்கியம் மற்றும்

சந்தோஷத்திற்குச் சிறந்த உத்தரவாதம் ஆகுகின்றது. இந்த நீதியே ஏறெடுக்கப்பட்டுள்ள அர்ப்பணிப்பிற்கான உண்மை மற்றும் நேர்மையின் வாக்குறுதியாய் இருக்கின்றது.

இந்தக் கொள்கையே, திருமணத்திற்குப் பின்னுள்ள நோக்கமானது உண்மையில் அன்பாகவே இருந்துள்ளது என்பதைத் தவிர, பாதுகாப்பு அடைய வேண்டும் என்றோ அல்லது சந்தோஷமற்றச் சூழ்நிலையினின்று தப்பித்துக்கொள்ள வேண்டும் என்றோ அல்லது சரீரப்பிரகாரமான ஈர்ப்புக்காக மாத்திரம்தான் என்றோ நோக்கம் இருக்கவில்லையென்று, தம்பதிகளில் ஒவ்வொருவருக்கும் நிச்சயத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

இந்த மனப்பாங்கானது, ஏறெடுக்கப்பட்டுள்ள பொறுப்புகள் சாதாரணமாய்க் கருதப்படாமல், மாறாக உண்மையில் வாக்குறுதிகளாகப் பார்க்கப்படுகின்றது என்றும் கூட உறுதியளிக்கின்றதாய் இருக்கின்றது. ஞானி ஞானமாய் எழுதியுள்ளது போல:

"*நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப் பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம்.*" *– பிரசங்கி 5:5*

## ● நியாயமும்

உண்மையான திருமணம் என்பது அன்பினுடைய விளைவாக இருக்கின்றபோதிலும் மற்றும் உணர்வுகள் அனைத்திலுமே அன்பானது பலமான உணர்வாக இருக்கின்றபோதிலும், திருமணத்திற்குள் பிரவேசிக்கும் காரியமானது உணர்வுகளையும் தாண்டின ஒரு தீர்மானமாகும் - அது நியாயத்தினால் வழிக்காட்டப்பட்டிருக்க வேண்டும்.

திருமணங்களானது பொதுவாகவே சரீர மற்றும் பாலுறவு ஈர்ப்புகள் சமச்சீரற்ற விதத்தில் பலமாய்க் காணப்படும் ஜீவியத்தின் ஆரம்ப வருஷங்களில் குறிப்பாகத் துவங்குகின்றது. "உடலழகிற்குத்

தோல் அளவு ஆழம் மாத்திரமே உண்டு" என்ற வாக்கியத்தின்படி இவ்வகையான ஈர்ப்பு இரண்டு வெவ்வேறு தனித்துவமான நபர்களை ஒன்றிணைக்கும், பெலனில்லாத பசையாகவே காணப்படும்; மற்றும் இந்தப் பசையினால் உண்டான ஒட்டானது, அன்றாட ஜீவியத்தின் அழுத்தங்களினால் ஒட்டு விட்டுப் போய்விடும்.

உணர்வுகளின் ஈர்ப்புகள் எனும் ரோஜா நிற, கண் கண்ணாடிகளை அப்புறப்படுத்திவிட்டு ஒருவருக்கொருவர் எதிர்க்கால வாழ்க்கைக்குறித்துப் பரஸ்பரமாயும், குறிக்கோளுடனும் கலந்து ஆலோசிக்கத் துவங்குகையிலேயே சந்தோஷகரமான மற்றும் வலுவான திருமண வாழ்க்கைகள் அமைகின்றது. விருப்பு வெறுப்புகளை ஒப்பிட்டுப்பார்க்கும் விஷயங்களிலும், தனிப்பட்ட உணர்வுகளின் விஷயங்களிலும், செயல்களின் விஷயங்களிலும், குறிக்கோள்கள் மற்றும் இலட்சியங்களின் விஷயங்களிலும்தான் "நியாயமானது" ஆளுகைச் செய்கின்றது.

இந்தத் திருமணத்திற்காய் நாடி, மேற்கொள்ளப்படும் காதல் உரையாடல்களில் கண்டுபிடிக்கப்படும் குணத்திலுள்ள வித்தியாசமானது/சிறு சிறு பொருத்தமின்மையானது, திருமணத்திற்குப் பிற்பாடு நமது எதிர்க்கால துணை மாற்றமடைவார்கள் என்ற எண்ணங்களால் மூடி மறைக்கப்படுகின்றது. இப்படி மாற்றமடையும் காரியமானது உண்மையில் நடக்கலாம்; நடக்காமல்கூட இருக்கலாம். ஒருவேளை மாற்றங்கள் நிகழாவிட்டாலும், துணையினை அவர்கள் இருக்கிற வண்ணமாகவே ஏற்றுக்கொண்டிட வேண்டும்.

கிறிஸ்தவ திருமணங்களைப் பொறுத்தமட்டில், "கர்த்தருக்குள் மாத்திரம்" என்னும் கட்டுப்பாட்டை அப்போஸ்தலனாகிய பவுல் தெரிவிக்கின்றார். இந்தப் புதிய ஏற்பாட்டின் ஆலோசனைக்கு இசைவாகப் பழைய ஏற்பாட்டிலும் யூத ஜனங்கள், தங்கள்

விசுவாசத்திற்குள் இருப்பவர்களை மாத்திரம் திருமணம் பண்ணிட வேண்டும் என்றுள்ள தேவனுடைய கட்டளைக் காணப்பட்டுள்ளது.

ஆனால் அப்போஸ்தலனின் அறிவுரை என்பது கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களைத் திருமணம் பண்ணிட வேண்டும் என்றுள்ள காரியத்திற்கும் மேலானதாகும். இது அவர்களது தனிப்பட்ட கிறிஸ்தவ அர்ப்பணிப்பின் அளவையும், தீவிரத்தையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. மீண்டுமாகப் பூமிக்குரிய அடிப்படையைவிட, ஆவிக்குரிய அடிப்படையிலேயே உண்மையான பொருத்தம் அதிகமாய்க் காணப்படவேண்டும் என்று பார்க்கின்றோம். இதில் குறைவுபட்டிருத்தல் என்பது, "பொருத்தமற்ற விதத்தில் பிணைக்கப்பட்டதாய்" இருக்கும் (2 கொரிந்தியர் 6:14).

## ● கிருபையும்

அன்பானது திருமணங்களுக்கான அஸ்திபாரமாய் மாத்திரம் இராமல், அவர்களை இயக்கிடும் மின்சாரமாகவும் இருக்கின்றது. தம்பதியினர் இருவருடைய சுபாவ வித்தியாசங்களை/சிறு சிறு பொருத்தமின்மைகளை இணைத்திடுவதும், துணையினுடைய விருப்பங்களுக்காய்த் தன் விருப்பங்களைக் கீழ்ப்படுத்திடுவதும், இரண்டு வெவ்வேறு விதங்களில் வளர்ந்துள்ள தனி நபர்களைப் புதிய ஒன்றாக இணைத்திடுவதும் - அன்பினுடைய வேதியியல் இல்லாமல் கிட்டத்தட்ட சாத்தியமற்றக் காரியங்களாகவே இருக்கும்.

இந்த அன்பானது திருமணத்திற்காய் நாடி மேற்கொள்ளப்படும் காதல் உரையாடலில் வெளிப்படையாக வெளிப்படுத்தப்படுகின்றது. இது காதல் நயவுரை உரையாடப்படுவதில் ஒரு பாகமாகும். ஆனால் திருமணம் நடைபெறுகையில் மற்றும் மணப்பெண் மனைவியாகுகையில், "வழக்கம்" எனும் காரியமானது இயல்பாகவே உருவாகிவிடுகின்றது. இந்த அன்றாட வழக்கத்துடன் இயல்பாகவே அலட்சிய மனப்பான்மையும் உள்ளே வந்து, ஒருவர் இன்னொருவரின் பணிவிடைகளை அசட்டைப்பண்ணிடுவதற்கு

ஏதுவாகுகின்றது. ஜீவியத்தில் மரியாதை/நன்னயத்திற்கான சாதாரண வெளிப்படுத்தல்களாகிய "தயவுகூர்ந்து" மற்றும் "உங்களுக்கு நன்றி" எனும் வார்த்தைகளும் பேசப்படாமலே போய்விடுகின்றன.

அடிக்கடி பின்வரும் பேச்சு எழும்புகின்றது:

"நீங்கள் என்னை அன்புகூருகின்றீர்களா அல்லது இல்லையா?"

"நீ முன்பு என்னிடத்தில் கூறியிருந்தாய், ஆனால் நான் மறந்துபோய்விட்டேன்."

"நான் உன்னை அன்புகூருகின்றேன்/I love you" எனும் மூன்று மந்திர வார்த்தைகளை அடிக்கடி உண்மையாய்த் திரும்பத்திரும்பக் கூறுவது எவ்வளவு முக்கியமானவையாகும். இந்தப் பாசத்தினை முத்தத்தினாலோ அல்லது அரவணைப்பினாலோ விவரிப்பதும்கூட எவ்வளவு முக்கியமானது ஆகும். இதற்கு மேலாக மிகவும் ஆறுதலாய் உள்ள சிறுசிறு காரியங்களைச் செய்திடுவதும் மிகவும் முக்கியமானதாகும் - அதாவது எதிர்ப்பார்க்காத விதத்தில் அன்பளிப்பைக் கொடுத்தல் அல்லது எதிர்ப்பாராத விதத்தில் பாராட்டுதல் ஆகும். அநேகமாக ஒருவர் இன்னொருவருக்காகச் சந்தோஷமாய்ப் பணிவிடைகளைச் செய்வதின் மூலமும் மற்றும் ஒருவர் இன்னொருவருக்காகக் காரியங்களைச் செய்வதின் மூலமும் மற்றும் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து காரியங்களைச் செய்வதின் மூலமும், இந்த உருக்கமான அன்பினை வெளிக் காட்டிடுவது மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

## ● உருக்கமான இரக்கமுமாய்

"தவறுவது என்பது மனித இயல்பாகும்." ஒருநாளில் இருபத்துநான்கு மணி நேரங்களும் சேர்ந்து வாழும் எந்த இரு நபர்களினாலும், இந்தப் பழமொழியினுடைய உண்மைக்கு நிச்சயமாய்ச் சான்று பகரமுடியும். அன்றாட ஜீவியத்தின் ஓட்டத்தில்,

விழுந்துபோன நிலைமையில் காணப்படும் நம்மிலுள்ள யாராலும் எப்போதுமே நாம் செய்ய வேண்டியதை அல்லது நாம் செய்ய விரும்புவதைச் செய்ய முடிவது என்பது கூடாத காரியமாகும்.

இந்தச் சறுக்கல்கள்தான் குடும்பத்தில் மிகவும் எரிச்சலூட்டும் சந்தர்ப்பங்களாகக் காணப்படுகின்றன. இந்த நிலைமையானது நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு திசைகளில் பலவீனங்களைப் பெற்றிருக்கின்றோம் என்ற உண்மையினால் இன்னும் மோசமாகுகின்றது. ஆகையால் நாம் அதே காரியங்களில் திரும்பத்திரும்பச் சறுக்கி விழுகின்றோம். இது நம் துணையினுடைய பார்வையில் நாம் காரியங்களை நன்றாய்ச் செய்வதற்கு முயற்சிக்காதது போன்று காணப்படும்.

இங்குதான் திருமண வாக்குறுதியின் "உருக்கமான இரக்கங்கள்" அதன் பங்கினை ஆற்றிட வேண்டும். நம்முடைய துணைக் குறித்ததான நம்முடைய கணிப்புகளானது அவர்களுக்கான நம்முடைய அன்பினால் கனிவாக்கப்பட வேண்டும். "அன்பு சகலத்தையும் நம்பும்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது போன்று, காரியத்தினை நன்றாய்ச் செய்திடுவதற்குரிய தனது துணையினுடைய வாஞ்சையில் ஒவ்வொரு தம்பதியினரும் நம்பிக்கைக்கொள்ள வேண்டும்.

ஓசியா மூலமான படிப்பினையானது இங்குப் பலமாய்க் காணப்படுகின்றது. இஸ்ரயேலானவள், "அந்நிய தெய்வங்களோடு வேசித்தனம் பண்ண" போயிருந்தபோதிலும், அவளை மீண்டுமாகத் திரும்பப் பெற்றுக்கொள்வதிலுள்ள தம்முடைய விருப்பத்தினைத் தேவன் விவரித்துக்காட்டுகின்றார். தேவன் உக்கிரம் கொண்டிருந்தார் என்பது உண்மையே. சிட்சை என்பது உண்டு, ஆனாலும் இறுதியில் மன்னிப்பும் உண்டு.

பெரும்பான்மையான திருமண வாழ்க்கையில் காணப்படும் மனஸ்தாபங்களைப் பார்க்கையில் மன்னிக்கும் தன்மை இல்லாதிருப்பதே காரணம் என்று விளங்குகிறதல்லவா? நாம்

திருமணம் பண்ணியுள்ள துணையினால் நமக்குண்டாகும் அதிருப்தியின் ஒவ்வொரு தருணங்களிலும், அநேகமாக அவர்களும் நம்மில் அதிருப்தி அடைந்திருப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்வது என்பது எப்போதும் உதவிகரமானதாக இருக்கும். கருணையும், மன்னிப்பும் நமக்கு அவசியம் என்கிற காரியமானது நம்முடைய ஜீவிதத் துணையினிடத்தில் நாம் மிகுந்த மன்னிப்பின் மனப்பான்மையினைக் கொண்டிருப்பதற்கு மாபெரும் உந்துதலாக இருக்கும்.

- **உண்மையாய்**

இந்தத் தன்மையும் ஓசியாவின் சம்பவத்தில் அருமையாய் விவரிக்கப்பட்டுள்ளது. ஓசியாவின் மனைவியாகிய கோமேர் உண்மையற்றவளாய் இருந்தாள். திருமணத்திற்கு முன்பும், திருமணத்திற்குப் பின்பும் அவள் மற்ற மனுஷருக்குப் பின்னாக ஓடினாள். எனினும் அவளைத் திரும்பவும் ஏற்றுக்கொள்ளும்படியாக ஓசியாவிடம் கூறப்பட்டிருந்தது. இதுபோலவே கோமேர் அடையாளப்படுத்தும் இஸ்ரயேலும் திரும்பத்திரும்பத் தேவனுக்கு உண்மையற்று இருந்தாள். எனினும் அவள் உண்மையற்றவளாய் இருந்தபோதிலும், தாம் அவளுக்கு உண்மையாய் இருந்து அவளைத் திரும்பவும் ஏற்றுக்கொள்வார் என்று தேவன் அவளுக்கு உறுதியளித்தார்.

இந்த உண்மைத் தன்மையானது, "தன் கணவன்/மனைவி அல்லாத மற்ற எதிர்ப்பாலினரை நிராகரிப்பேன்" என்று பாரம்பரிய திருமண வாக்குறுதியில் இடம்பெறும் வார்த்தைகளினால் அருமையாய் வெளிப்படுத்தப்படுகின்றது. திருமணம் செய்யும் தம்பதியரில் ஒரு துணை மற்றத் துணையினுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்திச் செய்கிறது இல்லையென்றாலும், அவர்கள் கவனம் செலுத்தப்பட வேண்டியவர்களாகவும், வாழ்க்கையில் மையமானவர்களாகவும் மற்றும் முக்கியமானவர்களாகவும் ஒருவருக்கொருவர் காணப்படவேண்டும்.

பெற்றோரோ, பிள்ளைகளோ, மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரவான்களோ - இவர்கள் யாருமே துணையினுடைய ஸ்தானத்திற்கு மாற்றாகிட முடியாது/துணை ஸ்தானத்தினை நிரப்பிட முடியாது. ஒருவேளை வேறெந்த நபரும் ஒரு துணைக்கு முதலாம் நபராகிட முடியாதானால், இப்படியே இல்லம் அல்லது வேலை அல்லது பொழுதுபோக்கு அல்லது வேறு ஏதேனும் விருப்பங்களின் விஷயங்களும் ஒரு துணைக்கு முதலாம் காரியமாக இருத்தல் முடியாது. ஒருவருடைய சிந்தனைகளும், நேரங்களும் மதத்திற்கு அடுத்த விஷயங்களிலும்கூட அவரின் ஜீவிதத் துணைக்கு முதலாவதாக அடமானமாகுகின்றது என்று அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டியுள்ளார். இதைக்குறித்து அவர் கூறினதாவது:

"*விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். விவாகம்பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்.*" *–1 கொரிந்தியர் 7:32, 33*

இந்த ஒரு காரணத்திற்காகவே தனிமையாக இருந்து, தனது மதச் சம்பந்தமான நாட்டங்களுக்கெனத் தனது அனைத்தையும் அர்ப்பணித்துவிடும் வாய்ப்பினைக்குறித்துக் கிறிஸ்தவன் சிந்தித்துப் பார்க்கத்தக்கதாக அப்போஸ்தலனாகிய பவுல் பரிந்துரைக்கின்றார். ஆகையாலே கிறிஸ்தவ திருமணம் குறித்த தனது கலந்தாய்வுகளுக்கான சுருக்கமாகக் கீழ் இடம்பெறும் வார்த்தைகளை அவர் தெரிவிக்கின்றார்:

"*இப்படியிருக்க, அவளை விவாகம்பண்ணிக்கொடுக்கிறவனும் நன்மைசெய்கிறான்; கொடாமலிருக்கிறவனும் அதிக நன்மை செய்கிறான்.*" *–1 கொரிந்தியர் 7:38*

## ● நீ கர்த்தரை அறிந்துகொள்வாய்

ஓசியாவின் சம்பவத்தில், இந்தத் தீர்க்கத்தரிசனத்தில் இடம்பெறும் கணவன் அடையாளத்தில் கர்த்தராவார். ஆகையால் இவ்வசனத்தின் வார்த்தைகளானது, "நீ உன் கணவனை அறிந்துகொள்வாய்" என்றும் சொல்லிடலாம். இதைப்போன்று ஒருவர், "நீ உன் மனைவியை அறிந்துகொள்வாய்" என்றும் சொல்லிடலாம்.

அன்றாட ஜீவியம் ஜீவிக்கையிலேயே ஜனங்கள் உண்மையில் ஒருவரைக்குறித்து இன்னொருவர் நன்கு அறிந்துகொள்வார்கள். அவசரத் தருணங்கள், தீர்மானம் எடுக்க வேண்டிய, கலந்தாலோசிக்க வேண்டிய தருணங்கள் ஆகியவைகளே ஒருவர் இன்னொருவரைப் பற்றிப் புரிந்து அறிந்துகொள்ளும் தருணங்கள் ஆகுகின்றன; வேறு எந்த விதத்திலும் இப்படிப் புரிந்து அறிந்துகொள்ள முடியாது. ஒருவர் இன்னொருவர் பற்றின இந்த நெருக்கமான அறிவே, தம்பதிகள் ஒரு புதிய குடும்பமாக - "ஒரே மாம்சமாக" ஒன்றிணைவதற்கு உதவிகரமாய் இருக்கின்றது."

"ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்" (ஆதியாயமம் 4:1) - இந்த வசனத்தில் இடம்பெறும் இதே வார்த்தையை கவனிக்கையில், திருமணமாகிக் கூடிவாழும் காரியத்திற்கு வேதாகமமானது நாசுக்காய் வார்த்தைகளை வழங்கியுள்ளது என்பது தற்செயலான காரியமல்ல. ஒவ்வொரு நெருக்கமான உறவும் - அது திருமண ஒன்றிணைதலில் சரீரப்பிரகாரமாக உண்டாகும் நெருக்கமான உறவாக இருப்பினும் அல்லது உள்ளார்ந்த உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளும் மனதினுடைய நெருக்கமான உறவாக இருப்பினும், அது வாழ்க்கைத் துணையைக்குறித்த ஆழமான புரிந்துகொள்ளுதலை/ அறிந்துகொள்ளுதலைக் கொண்டு வருகின்றதாய் இருக்கும்.

இந்த அறிதலானது விளைவை உண்டுபண்ணும் அறிதலாக இருந்திட வேண்டும். அது அதிகமான உருக்கமுள்ள, அதிக

புரிந்துகொள்ளுதலுள்ள, அதிக இரக்கமுள்ள உறவினை விளைவாகக் கொண்டுவந்திட வேண்டும். இதையே அப்போஸ்தலனாகிய பேதுரு பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

*"அந்தப்படியே புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்." –1 பேதுரு 3:7*

ஓசியாவின் வார்த்தைகளை நாம் பார்க்கும்போது, நீதியோடு பிரவேசிக்கப்பட்டுள்ள நல்லதொரு கிறிஸ்தவ திருமணமானது, உண்மையாய் நிறைவேற்றப்படுமானால் - இது நாம் "கர்த்தரை அறிந்துகொள்வதற்கு" உதவியாய் இருக்கும் என்பதும் உண்மையே.

## தலைமைத்துவம் தொடர்பாக

*"மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து . . . தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்." – எபேசியர் 5:22-25*

*"எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூருவது போல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்." -எபேசியர் 5:33*

*"ஏவாள் மீது ஆதாம் ஆளுகைச் செய்யத்தக்கதாகத் தேவன் அவளை ஆதாமினுடைய பாதங்களிலிருந்து எடுத்து உருவாக்கவில்லை; அல்லது ஏவாள் ஆதாமின்மேல் ஆளுகைச் செய்யத்தக்கதாகத் தேவன் அவளை ஆதாமின் தலையிலிருந்தும் எடுத்து உருவாக்கிடவில்லை;*

*மாறாக ஆதாமினுடைய பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஆதாமினுடைய இருதயத்திற்குப் பக்கமாக, அருகாமையிலிருந்து எடுத்து உருவாக்கப்பட்டிருக்கிறாள்.*"

*– முற்காலத்து யூதப் பழமொழி.*

இருபதாம் நூற்றாண்டின் புருஷர்கள் மற்றும் ஸ்திரீகளுடைய கவனங்களானது வேதாகமத்தின் வார்த்தைகளைவிட, இந்த யூதப் பழமொழியினிடத்திற்கே மிகவும் கவரப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றது. ஆனால் முற்காலத்து யூதப் பழமொழி என்பது வெறும் முற்காலத்து யூதப் பழமொழியே. ஆனால் வேதாகமம் என்பது வேதாகமந்தான் - அது தேவனுடைய அதிகாரப்பூர்வமான வார்த்தைகளாகும். அப்படியானால் வேதவாக்கியங்களின்படி திருமண உறவில் கணவன்மார்கள் மற்றும் மனைவிமார்களுடையது என்று ஒப்புவிக்கப்பட்டுள்ள ஸ்தானம்/ பங்கு என்ன?

கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கும் காரியம் தொடர்புடைய முழுக்காரியங்களும் அப்போஸ்தலன் பேதுரு எழுதியுள்ள முதலாம் நிருபத்தில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இரண்டாம் அதிகாரத்தின் 13-ஆம் வசனத்தில் கிறிஸ்தவன் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிய வேண்டிய காரியத்தைக்குறித்துக் கூறத் துவங்குகின்றார்:

"*நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்.*"

ஆனால் அதற்கென்று இந்த வார்த்தைகளானது எல்லாவற்றிற்குமான கட்டளையாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்று இதே அப்போஸ்தலன், அப்போஸ்தலர் 4:19-ஆம் வசனத்தில் தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கிப்பதற்காக அரசாங்கம் தண்டித்திடும் என்று பயமுறுத்தப்பட்டபோது சுட்டிக்காட்டுகின்றார்; இவர் யோவானோடுகூட:

“*தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள் என்றார்.*”

அடுத்ததாகப் பதினெட்டாம் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு இந்தப் போதனையை எஜமான்கள் மற்றும் அடிமைகள் விஷயத்தில் சம்பந்தப்படுத்திப் பேசத் துவங்குகின்றார். இதை நாம் வாழும் சமுதாயத்தின் காலங்களில் எஜமானருக்கும், தொழிலாளிக்கும் பொருத்திடலாம்.

“*வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்த குணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டு குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள். ஏனெனில், தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும்.*” ***–1 பேதுரு 2:18, 19***

இங்குக் கீழ்ப்படியும் காரியமானது சட்டப்பூர்வமான உரிமைகளைப் பொருட்படுத்தாது காணப்பட வேண்டும், அதாவது நல்ல எஜமானர்களுக்கும், முரட்டுக் குணமுள்ளவர்களுக்கும் அல்லது கொடுமையான எஜமானர்களுக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும். எனினும் எஜமானைவிட்டு ஓடிப்போன அடிமையாகிய ஒநேசிமுக்காக இரக்கம் காட்டும்படிக்கு அப்போஸ்தலனாகிய பவுல் பிலேமோனுக்கு முழு நிருபத்தையும் எழுதுகின்றார்.

பின்னர் அப்போஸ்தலனாகிய பேதுரு தனது நிருபத்தின் 3-ஆம் அதிகாரம், வசனங்கள் 1-7-வரையிலும் தன் கவனத்தைக் கணவன்மார்கள்மீதும், மனைவிமார்கள்மீதும் திருப்புகின்றார்; இதில் முதலாவது வசனத்தை மாத்திரமே இப்பொழுது நாம் மேற்கோளிடுகின்றோம்:

“*அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி... ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்.*” ***–1 பேதுரு 3:1, 2***

கணவனுக்கு மனைவி கீழ்ப்படிந்திருக்கும் காரியத்தினை விவரிக்கும் விதமாக அப்போஸ்தலனாகிய பேதுரு சாராள் மற்றும் ஆபிரகாம் குறித்து ஆறாம் வசனத்தில் குறிப்பிடுகின்றார்:

"*அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.*" *-1 பேதுரு 3:6*

கணவனுக்கு மனைவி கீழ்ப்படிந்திருப்பதற்குரிய உதாரணமாகச் சுட்டிக்காண்பிக்கப்படும் இதே சாராள், அவளது வேலைக்காரியாகிய ஆகாரையும், ஆபிரகாமுக்கு அவள் பெற்ற குமாரனாகிய இஸ்மயேலையும் வெளியே அனுப்பிவிடும்படிக்குத் தன் கணவனுடன் பலமாய்ப் போராடினவளாகவும் இருக்கின்றாள். தேவன் சாராளின் சார்பாகக் காரியத்தில் தலையிட்டுக் கூறினதாவது:

"*அந்தப் பிள்ளையையும், உன் அடிமைப் பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்க வேண்டாம்; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்; ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள்.*" *- ஆதியாகமம் 21:12*

ஆகையால் ஆபிரகாமின் தலைமைத்துவமானது சர்வாதிகார விதமாய் இருக்கவில்லை. மாறாக தன் மனைவியாகிய சாராளின் உணர்வுகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டதாகவும், அவளது கருத்துகளுக்கு இணங்கினதாகவும்கூடக் காணப்பட்டது. இது இன்னுமாகப் புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் குறித்த தனது கருத்துகளைப் பேதுரு கூறி முடிக்கையில் முக்கியத்துவப் படுத்தப்படுகின்றது:

"*அந்தபடியே புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.*" *-1 பேதுரு 3:7*

தலைமைத்துவத்தின் ஸ்தானத்தினைச் செயல்படுத்து கையில் கணவன் தன் மனைவியினுடைய பலவீனப் பாண்டமான நிலையினை அறிந்தவராக, எந்தவொரு காரியத்திலும் அவளது கண்ணோட்டங்களுக்கு மதிப்பும், கவனமும் காண்பிக்க நாடிடும்படியாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. கணவனும் மனைவியும் சேர்ந்து சுதந்தரவாளிகளாக இருப்பதினால், இவர்கள் தங்களது சுதந்தர வீதத்தினை அடைய நாடிடும் வழிகளிலும் ஒன்றிணைந்தே செயல்பட வேண்டும்.

இப்படியாகச் செய்யாத கணவனுக்கான சிட்சை என்பது, கணவனுடைய ஜெபத்திற்குத் தடை ஏற்படும் காரியமாய் இருக்கும். ஜெபத்திற்கும், நமது கிறிஸ்தவ ஜீவியத்திற்கும் இடையிலுள்ள உறவானது கர்த்தர் கற்றுத்தந்த ஜெபத்தில் நன்கு விவரிக்கப் பட்டுள்ளது.

*"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." – மத்தேயு 6:12*

நாம் எப்படி மற்றவர்களை நடத்துகிறோமோ அப்படியே தேவனும் நம்மை நடத்துவார் என்று நாம் எதிர்ப்பார்த்திடலாம். தன் மனைவியினுடைய வேண்டுதல்களுக்குக் கணவனானவன் அனுதாபம் பாராட்டவில்லையெனில், பரமபிதாவிடம் கருணைக்காக வேண்டி அவன் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கும் தடையுண்டாகும். ஆகையால் அண்டசராசரத்தின் சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டிய கணவனானவன், தேவனிடம் தான் எதிர்ப்பார்த்திடும் அதே கருணையுடன்கூடிய இரக்கத்துடன், தன் மனைவியை நடத்துவது என்பது கணவனுக்கு அனுகூலமானதாய் இருக்கும்.

அப்போஸ்தலனாகிய பேதுருவின் நிருபத்திற்கு நாம் திரும்பிவருகையில், கீழ்ப்படிதல் சம்பந்தமான தனது வார்த்தைகளை 1 பேதுரு 3:8-ஆம் வசனத்தின் வார்த்தைகளோடு நிறைவு செய்கின்றார் என்று பார்க்கின்றோம்.

“*மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள்.*”

ஒவ்வொரு தனிநபரும், மற்ற ஒவ்வொருவருக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இது “மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றாயோ, அதை நீயும் மற்றவர்களுக்குச் செய்” என்ற பொன்னான பிரமாணத்தின் விரிவாக்கமே ஆகும்.

## ● கணவன் பற்றின – பயபக்தி / HUSBAND-PHOBIA

இந்தப் பாடத்தை நிறைவு செய்வதற்கு முன்னதாக எபேசியர் 5:33-ஆம் வசனத்தின் கடைசி சொற்றொடரைப் பார்க்கலாம்.

“*மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.*”

தமிழில் பயபக்தியாய் இருக்கக்கடவள் என்று மொழிப் பெயர்க்கப்பட்டுள்ள “Reverence” என்ற ஆங்கில வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை phobeo என்பதாகும். மனைவியானவள் கணவனுக்கு அச்சம் கொண்டிருக்க வேண்டும்/‘Husband-Phobia.’ இந்த வார்த்தையானது பீதி குறித்த கருத்தை அல்லது பயப்படுகிற கருத்தைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. எனினும் இது “பயபக்தி”/ Reverence என்ற கருத்தையும்கூடத் தெரிவிக்கின்றது; மேலும் இப்படியாகவே தேவன் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் இவ்வார்த்தையானது பொதுவாக மொழிப்பெயர்க்கவும் பட்டுள்ளது.

மனைவியானவள் எப்படி, தன் கணவன் குறித்து அச்சம் கொண்டிருக்க வேண்டும்? இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறதான அச்சம்/பயம் அல்லது phobia அவளது கணவன் என்ற நபர் குறித்ததாக இராமல், மாறாக கணவனின் ஸ்தானம் குறித்ததாக இருக்க வேண்டும் என்று நாங்கள் கருத்துத் தெரிவிக்கின்றோம். தன் கணவனுடைய தலைமைத்துவத்தின் ஸ்தானத்திற்கு மனைவியானவள் உயர்ந்த மதிப்புக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தினையே இவ்வசனமானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. கணவன் கிறிஸ்துவின் ஸ்தானத்திற்கு அடையாளமாய் இருக்கின்றார், மனைவி சபைக்கு அடையாளமாய் இருக்கின்றாள்.

திருமண உறவில் மனைவியானவள் தனக்கே உரிய தகுதியான ஸ்தானத்தினின்று மாறிடாதபடிக்கு, மனைவியானவள் மாத்திரம் அச்சம் கொண்டிராமல், கணவனும்கூடத் தன் ஸ்தானத்தினை முறையாய்ச் செயல்படுத்த தவறிப்போய்விடாத படிக்கு அச்சம் கொண்டிருக்க வேண்டும்.

கணவன் மற்றும் மனைவியினுடைய பங்காற்றுதல்களின் சீரான நிலைமைக்குறித்து முதலாம் ஸ்திரீயைச் சிருஷ்டித்தபோது தேவன் தம்முடைய வார்த்தைகளில் சுட்டிக்காண்பித்துள்ளார்:

"***பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.***" ***– ஆதியாகமம் 2:18.***

"துணை" என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதான எபிரெய வார்த்தைக்கான அர்த்தம் "A Counterpart"/ஒத்தப்பாதி என்பது ஆகும். வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டும் என்றால், அவள் தனது கணவனில் நிறைவடைகின்றாள் மற்றும் அவன் தன் மனைவியில் நிறைவடைகின்றான் - அவர்கள் குழுவினர்/team ஆகுகின்றனர். இது திருமணத்தில் தேவன் கொண்டிருந்த நோக்கத்திற்கு எத்துணை இசைவாய் இருக்கின்றது!

"***அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்.***"

- CHICAGO BIBLE STUDENTS
(தமிழாக்கம்)

**பிரதிகள் தேவைப்படுவோர்**
**தொடர்புக்கு:**
8428737474; 9442221874